வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
# Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | புவியியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 4 | 11. | 4 | 21. | 5 | 31. | 4 |
| 2. | 1 | 12. | 2 | 22. | 1 | 32. | 3 |
| 3. | 3 | 13. | 5 | 23. | 3 | 33. | 1 |
| 4. | 2 | 14. | 4 | 24. | 3 | 34. | 4 |
| 5. | 5 | 15. | 3 | 25. | 1 | 35. | 1 |
| 6. | 1 | 16. | 1 | 26. | 5 | 36. | 5 |
| 7. | 4 | 17. | 2 | 27. | 4 | 37. | 3 |
| 8. | 2 | 18. | 5 | 28. | 5 | 38. | 1 |
| 9. | 3 | 19. | 3 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 5 | 20. | 3 | 30. | 1 | 40. | 4 |

## பகுதி – II

*01)*

i. *1 – பாடசாலை*
*2 – நீதி மன்றம்*
*3 – புகையிரத நிலையம்*
*4 – பிரதேச செயலகம்* (0.5 x 4 =2 புள்ளிகள்)


agaram.lk

ii. a) *மாகாண எல்லை* *(0.5 புள்ளிகள்)*


b) *1. வெளியரும்பிய பாறை*
*2. ஏனைய பயிர்கள் / பிறபயிர்.*
*3. இரட்டைப் புகையிரதப் பாதை.*

iii. தென்னை, இறப்பர்.

iv. a.




b.




1 : 25, 000

v. அகலக்கோடு $7° - 15'$
நெடுங்கோடு $80° - 10'$ *(02 புள்ளிகள்)*

vi.
- *சம தரையான நிலம்*
- *நதி, போக்குவரத்து வீதிகள்.*
- *தென்னைச் செய்கைக்கு ஏற்ற வளமான மண்.*
- *பிரதான நதியிலிருந்து செல்லும் கிளை ஆறுகள்.*

vii.
- படப்பிரதேசத்தில் தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதான வீதிகள் நெருக்கமாகக் காணப்படுகின்றன.
- படப்பகுதியின் தென்மேற்குப் பிரதேசம் ஒப்பீட்டளவில் சமவெளியாகக் காணப்படுகின்ற காரணத்தினால் பிரதான வீதி, புகையிரத வீதி, பிறவீதிகள், சிறுவீதிகள் அதிகளவில் காணப்படுகின்றது.
- உயரமான பகுதிகள் தென்கிழக்கே காணப்படுவதனால் வீதிகளின் வலைப்பின்னல் தன்மை ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றது.
- படப்பிரதேசத்தின் வடகிழக்கு காற்பகுதியில் சிறு வீதிகள், பிறவீதிகளே பரம்பியுள்ளன. நதி காணப்படுவதனால் போக்குவரத்து வீதி வலைப்பின்னல் தன்மை வரையறுக்கப்பட்டிருக்கின்றது.
- வடகிழக்குப் பகுதியில் காடு காணப்படுவதும் வீதியமைப்பில் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றது.

*02)*

viii. டோக்கியோ

ix. வியன்னா

x. இந்தியா

*03)*

i. ஆராய்ச்சி அல்லது பகுப்பாய்வு செய்வதற்காகச் சேகரிக்கப்பட்ட தகவல்களும், புள்ளி விபரங்களும் தரவுகள் எனப்படும்.

ii. *1)* அளவு சார் / பண்பு சார் தரவுகள்.
*2)* முதல் நிலைத் தரவுகள்

iii. *1.* அளவு / பண்பு சார் தரவுகள்
- எண்ணிக்கை அடிப்படையில் விளக்கக் கூடியது – அளவை சார் தரவு.
- எண்ணிக்கை அடிப்படையில் முன்வைக்காத தரவு – பண்புசார் தரவு இதனை அளவிட முடியாது.

*2.* முதல் நிலை / இரண்டாம் நிலைத்தரவுகள்
- ஒரு குறிப்பிட்ட போக்கத்திற்காக முதன் முதல் சேகரிக்கப்படும் தரவுகள்.
- ஆய்வாளரால் பெறப்படுவதால் பெறுமதியானது நம்பகத்தன்மை உடையது.
- காலம், உழைப்பு, வளம், செலவு அதிகம்.
- வேறொரு நபர், நிறுவனம் சேகரித் தரவுகள் இரண்டாம் முறை பயன்படுத்தும் போது அது இரண்டாம் நிலைத்தரவு.
- இரண்டாம் நிலைத்தரவு காலம், நேரம், செலவு குறைவு.
- இரண்டாம் நிலைத்தரவு ஆய்வாளனின் நோக்கத்திற்குத் சேகரிக்கப்பட்டது அல்ல, நம்பகத் தன்மைக் குறைவு.

*3.* தொடர் தரவு / தொடர்ச்சியற்ற
- தரவுகளின் பெறுமானம் தொடச்சியான பரம்பலை குறிக்குமாக இருந்தால் அது தொடர்தரவு.
- தொடர்ச்சியான பரம்பரைக் காட்டாத தரவு தொடர்ச்சியற்ற தரவு.

*4.* கூட்டமாக்கப்பட்ட / கூட்டமாக்கப்படாத தரவு.
- சேகரிக்கப்பட்ட தரவு மூலவடிவத்தில் காணப்பட்ட பச்சைத் தரவு.
- ஒழுங்கு படுத்தப்படாது, விசேட பெறுமானங்களைக் கொண்டிருக்கும் தரவுகளைக் கொண்டிருக்கும் தரவுகள்.
- பச்சைத் தரவினை வகைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யப்படின் அது கூட்டமாக்கப்பட்ட தரவு.
- அதிக எண்ணிக்கையான தரவுகளை வகுப்பாயிடைகளின் அடிப்படையில் அமைத்தால் அவை கூட்டமாக்கப்பட்ட தரவு எனப்படும்.

iv. ஆகாரம்
இடையம்
இடை

agaram.lk

04)

இலங்கையின் நெல் உற்பத்தி.

2006 – 2015 (000 மெ.தொ)

| ஆண்டு | உற்பத்தி | $\overline{x}$ | $x-\overline{x}$ |
|---|---|---|---|
| 2006 | 2136 | | -256 |
| 2007 | 1973 | | -419 |
| 2008 | 2125 | | -267 |
| 2009 | 2384 | | -8 |
| 2010 | 2630 | 2392 | 238 |
| 2011 | 1996 | | -396 |
| 2012 | 2717 | | 325 |
| 2013 | 2846 | | 456 |
| 2014 | 2236 | | -156 |
| 2015 | 2877 | | 483 |
| | | | 3004 |

மூலம் : சன்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களம்

1) $\overline{x} = \frac{Ex}{n}$ $\quad \frac{23920}{10}$

$\overline{x} - 2392$

$\sum \frac{[x-\overline{x}]}{n}$

$\sum \frac{[x-\overline{x}]}{n}$

$\sum(\propto - \overline{x}) = 600.4$

$n = 10$


$= \frac{3004}{10}$

agaram.lk

இடைவிலகல் 300.4

இலங்கையின் நெல் உற்பத்தி.

2006 – 2015 (m.t)




மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபவியல் திணைக்களம் - இலங்கை

iv.
- நெல் உற்பத்தி – 2006, 2007, 2008, 2009, 2011, 2014 ஆகிய ஆண்டுகளில் சராசரியை விடக் குறைவாகக் காணப்பட்டது.
- 2010, 2012, 2013, 2015 போன்ற ஆண்டுகளில் சராசரியை விட அதிகமாகக் காணப்பட்டது.
- 2009 இல் சராசரிக்கு அண்மித்தாக நெல் உற்பத்தி காணப்பட்டது.

05)

i. பல்கோட்டு வரைபு

ii.
- யூலை மாதத்தில் மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.
- ஒக்ரோபர் - டிசம்பர் வரை மழைவீழ்ச்சியின் அளவு உயர்வாகக் காண்படுகின்றது.
- யூன் - ஓகஸ்ற் வரை வெப்ப நிலை உயர்வாகக் காணப்படுகின்றது.
- ஜனவரி, பெப்ரவரி, ஒக்ரோபர், டிசம்பர் மாதங்கள் சராசரியாகக் காணப்படுகின்றது.
- மிக உயர்வான வெப்பநிலைப் பரம்பலை யூலை, ஓகஸ்ட் மாதங்களில் அவதானிக்கலாம்.

iii.
- பல்வேறு மாறிகள் பற்றிய தரவுகள் கோடுகளினால் காட்டப்படும்.
- பல்வேறு பிரதேசங்கள், அல்லது காலப்பகுதிகளுடன் தொடர்பான மாறிகளைக் காட்டுவதற்கும், ஒப்பீடு செய்வதற்குமான திறன்களைக் கொண்டிருக்கும்.
- மாறிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அதிகளவிலான கோடுகளை அமைக்க வேண்டியிருக்கும். இதனால் வரைபினை விளங்கிக் கொள்வதில் சிரமம் ஏற்படும்.

iv. கோட்டு, நிரல் வரைபடம்.

06)

i. புவிமேற்பரப்பிற்கு மிகவும் தொலைவிலிருந்து புவிமேற்பரப்பு அம்சங்களை அவதானித்தல் - பகுப்பாய்வு செய்தல் முறையாகும்.
செய்மதியூடாக துல்லியமாகவும், தெளிவாகவும், நிலப்பகுதியை அளவிடுவதற்கும், அடையாளப் படுத்தவும் உதவும் தொகுதியாகும்.

ii. 1. தொலையுணர்வின் மேடைகள் (sensing plat forms)
2. வான்வழி ஒளிப்படத் தொழில்னுட்பம் (Aerial photographic Technology)
3. செய்மதித் தொழில் நுட்பம் (Stallite Technology)

iii. 1. தொலையுணர்வு மேடைகள்.
- தொலையுணர்வு செயன்முறைக்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டு செல்லும் ஓடங்கள் குறிப்பிடப்படுகின்றது.
- உணர்விகளும் அவை பொருத்தப்படும் மேடைகளும் 3 வகைப்படும்.
  1) தரைமேற்பரப்பு மேடை
  2) வான்வழி மேடைகள்
  3) விண்வெளி மேடைகள்.
- செய்மதிகள், ஏவுகணைகள், விண்வெளி ஓடங்கள் ஆகியன விண்வெளி மேடைகளாகப் பயன்படுகின்றன.

2. செய்மதித் தொழில்நுட்பம்.
- செய்மதிகளில் பொருத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப உபகரணங்களானது தரவுகளைப் பெற்று அவற்றினை எண்ணிலக்கத் தரவுகளாகப் புவிமேற்பரப்பின் பல்வேறு இடங்களில் அமைவு பெற்றுள்ள பெறுகை நிலையங்களுக்கு அனுப்புகின்றன. இது செய்மதித் தொழில் நுட்பம் எனப்படும்.
- தரவுகளின் பகுப்பாய்வு, விளக்கத்தின் தொகுப்பே செய்மதித் தொழில்நுட்பம் ஆகும்.

3. வான்வழி ஒளிப்படங்கள்
- விமானங்களின் கீழ்பாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் நிழற்றப்படக் கருவிகள் மூலம் புவியின் நிலவுருவக் காட்சிகள் குறித்த அளவுகளில் படமாக எடுக்கப்படுகின்றன. அவ் வான்வழி ஒளிப்படங்கள் எனப்படுகின்றன.
- 2 வகைப்படும்.
  1. செங்குத்தான வான்வழி ஒளிப்படங்கள்.
  2. சாய்வான வான்வழி ஒளிப்படங்கள்.

agaram.lk

## பகுதி – II

*01)*

i) உலப்படம்

ii) 1. விலகும் தகட்டசைவு.

2. ஒருங்கும் தகட்டசைவு.

1) சமுத்திரத்தகடு – கண்டத்தகடு ஒருங்கல்.

2) கண்டதகடு – கண்டத் தகடு ஒருங்கல்.

3) சமுத்திரத் தகடு – சமுத்திர தகட்டு ஒருங்கல்.

3. நிலைமாறும் தகட்டசைவு.

படம் விளக்கம்.

iii) புதிய சமுத்திரப் படுக்கைகள் உருவாதல்.
மடிப்பு மலைகள் தோற்றம் பெறுதல்.
சமுத்திர அகழிகள்.
எரிமலைகள் வெடித்தல்
பிளவுப் பள்ளத்தாக்குகள்
நிலநடுக்கம்.
மண்சரிவு ஏற்படும்.
பனிமலைகள் உடைந்து விழுதல்.
சுனாமி ஏற்படல் (விளக்கம்)

iv) சமச்சீர் மடிப்பு, சமச்சீர் அற்ற மடிப்பு, குனிந்த மடிப்பு, விசிறி மடிப்பு, மேலுதைப்பு மடிப்பு, தலைகீழ் மடிப்பு, மேல்மடிப்புள் மடிப்பும் கீழ்மடிப்புள் மடிப்பும்.

*02)*

i) 1. பின் கடற்கரை

2. முன் கடற்கரை

3. அண்மித்த கடற்கரை.

4. அப்பாற்பட்ட கடற்கரை.

ii)
- கரையோர நிலவுருவங்களை உருவாக்குவதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணி.
- ஆழ்கடலில் இருந்து கரையோரத்தை நோக்கி வரும் போது ஆழமற்ற நிலப்பரப்பில் அது சிதைவடைகின்றது.
- மணல், கற்கள், பாறைத்துகள்களோடு கரையை நோக்கி நகர்த்தப்படும் - அது முன்கழுவல் எனப்படும்.
- இவ்வலை மீண்டும் அலைகளுக்கு அடியில் இழுபடும் போது அது மீள் கழுவல் எனப்படும்.
- மீள் கழுவலில் சிதைவடைந்த பாறைத்துண்டுகள், மணல் போன்றன கரையிலிருந்து அலையினால் கடலுக்குள் கொண்டு செல்லப்படும்.
- இது தொடர்ந்து இடம் பெற கரையோரம் அரிப்பிற்கு உட்படும்.
- அலை அரித்தல், கொண்டு செல்லல், படிதல் ஆகிய செற்பாடுகளை மேற்கொள்கின்றது.

iii) முகடு, கடற்குகை, அலை வெட்டிய மேடை, விரிகுடா, முனை வில்வளைவு, ஓங்கல், சிறுபாறைத் தீவு, ஊதுளை.

iv) மணல் கடற்கரை, மணல் பிளவுகள் மேடு, சேற்று நிலம், தீவுகள், தொம்போலா, கூழாங்கன்னாக்கு.

*03)*

i) உயிரினக் கூட்டம் என்பது ஏதாவது ஒரு காலநிலை வகைக்கு இசைவாக்கம் பெற்ற நிச்சயிக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளின் சமூகத்தையுடைய ஒரு சூழலாகும்.

ii) 1. அயனமழைக் காடுகள்.

2. இடைவெப்ப வலயக் காடுகள்.

3. மத்திய தரைக்காடுகள்

4. புல்நிலங்க்ள / சவன்னாக்கள்

5. தைக்கா காடுகள்

6. பாலைவனங்கள்

7. துந்திராக் காடுகள்

iii)
- காடழிப்பு
- நகரமயமாக்கல்
- கிராம, நகர விரிவாக்கம் - காடழிப்பு
- ஈரவலய தாவர விலங்குகளுக்கு மரபணு காரணமாக ஏற்படும் அச்சுறுத்தல்.

agaram.lk

- சட்ட விரோத வெட்டு மரக் கைத்தொழில்
- மண்அரிப்பு
- எரிபொருளுக்காக விறகுவெட்டுதல்.
- இரத்தினக்கல் அகழ்வு
- நீர்த்தேக்கங்களை அமைத்தல்.
- ஈர நிலங்களை நிரப்புதல், கட்டுமானங்களை மேற்கொள்ளல்.
- கண்டல் தாவரம் அழிக்கப்படல்.

iv) • மக்களிடையே சூழல் நேய எண்ணக்கருக்களை உருவாக்குதல்.
- காடழிப்பு, பயன்பாடு தொடர்பான சட்டங்களின் நடைமுறை.
  சட்டம்
- 1907- 16 ஆம் இலக்க வனச்சட்டம்
  1995 இல் 25ஆம் இலக்க வனச்சட்டம்.
- 1937 வனவிலங்கு தாவர பாதுகாப்புச் சட்டம்.
- 1980 தேசிய சுற்றாடல் சட்டம்.
- 1988 தேசிய மரபுரிமைகள் வனநிலச் சட்டம்.
- ஏற்றுமதிச் சட்டம்.
- வனவிலங்கு சரணாலயங்களை நிறுவுதல்.
  - ➢ அதிவிசேட சரணாலயம்.
  - ➢ இயற்கை
  - ➢ தேசிய வனப்பூங்கா
  - ➢ பாதுகாக்கப்பட்ட வளங்கள்.

04)

i) திண்ம நிலை.
திரவ நிலை.
வாயு நிலை.

ii) மேற்பரப்பு நீர்
தரைக்கீழ் நீர்
வளிநீர் விளக்கம்.

iii) நகரங்களின் அதிக நீர்ப்பயன்பாடு, நீர்வழிகள் தடைப்படல். கழிவகற்றல், விவசாயம், கைத்தொழில், சேவைகள், வீட்டுத்தேவைகளின் போது வெளியேற்றப்படும் கழிவுகள் நீருடன் வைத்தல்.
- நீருடன் இரசாயனப் பொருட்கள் கலத்தல்.
- நீர் வீண் விரயம்.
- கைத்தொழில்
- நிலக்கரி பெற்றோலிய, சுரங்க கைத்தொழில் மாசடைதல்.
- இயற்கை அனர்த்தம்.

iv) • விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- மழைநீரினைப் பயன்படுத்துதல்.
- சிக்கனமாகப் பயன்படுத்தல்.
- தரைக்கீழ் நீரினைப் பெற்றுக் கொள்ளும் வழிவகையைத் திட்டமிடுதல்.
- புதிய நீர் நிலைகளைக் கண்டறிதல்.
- உவர் தன்மையை நீக்குதல்.
- மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்.
- நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல்.
- நீர் மாசடைதலைத் தடுத்தல்.

## <u>மானிடப் புவியியல்</u>

05)

i) பொருளாதாரம், சேவை வசதிகளுடன் கூடிய பிரதேசம். அதிகளவில் மக்கள் நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்துவாழ ஒன்று கூடுவதன் மூலம் நகராக்கம் ஏற்படும்.

ii) குடித்தொகை, குடி அடர்த்தி, பொருளாதார நடவடிக்கை, நிர்வாக அலகுகள்.

agaram.lk

iii) அதிகரித்த சனநெரிசல்
வதிவிடப் பற்றாக்குறை
தொழிலின்மை
சேரிப்புற உருவாக்கம்
நீர்ப்பிரச்சினை
திண்மக் கழிவகற்றல் பிரச்சினை
நகர சூழல் மாசடைதல்.
நகர குற்றச் செயல்கள்

- வளங்கள் மீதான கேள்வி அதிகம்.
- சிறு வியாபாரம், பல்வேறு சேவைகளை வழங்குதல்.
- போதைப் பொருள் விற்பனை.
- பாலியல் திருட்டுத் தொழில் - சமூக விரோதச் செயல்கள் அதிகம்.
- செல்வந்தப் பகுதி விருத்தியடைதல்.

iv)
- நகர வரையறை மாற்றமடைந்தமை.
- கொழும்பு, ஏனைய நகர பிரதேசங்களிலும் நகரப் பண்புகள் நகர எல்லைக்கு அப்பால் பரவிக் காணப்படுகின்றமை.
- சமகாலத்தில் நகராக்கம் படிப்படியாக அதிகரிக்கின்றது.
- புதிய நகர அபிவிருத்திக் கொள்கைகள் மேல் மாகாணத்தைக் கொண்டு இடம் பெறுதல் - கொழும்பு பொருளாதாரத் திட்டம்.
- பசுமை நகரம், துறைமுக நகரம், Smart நகரம் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை.
- சூழல்நேய நகரம்.
  தென்மாகாண, வடமாகாண பொருளாதார வலய அபிவிருத்தி

*06)*

i) மண்ணினதும், சூழல் தொகுதியினதும் தரத்தினையும், மக்களின் சுகாதார நிலைமைகளைப் பாதுகாப்பதற்குமான ஓர் உற்பத்திச் செயன்முறையாகும்.

ii)
- மண் முகாமைத்துவம்
- களைகளை இல்லாதொழித்தல்.
- பீடைக் கட்டுப்பாடு.
- பல்லினப் பயிர்ச்செய்கை

iii)
- உற்பத்தியின் தரம் உயர் மட்டத்தில் காணப்படுதல், அதிகளவு விற்பனை.
- போசனை மிக்க உணவு உற்பத்தி.
- மண் வளப் பாதுகாப்பு.
- உயிரினப் பல்வகைமை விருத்தி.
- காலநிலை மாற்ற விளைவுகள் குறைக்கப்படுதல்.
- வலுச்சக்தி நுகர்வு குறைவடைதல்.
- நிலத்தோற்றம் பாதுகாக்கப்படுதல்.
- சிறிய விவசாயிகளுக்கு நன்மையளிக்கும்.
- பெண்கள் வலுவூட்டப்படுவர்.
- மரபு ரீதியான விவசாய முறைகள் பாதுகாக்கப்படும்.
- கிராம நகர இடப்பெயர்வு குறைவடையும்.
- சுகாதாரமான உணவுகழள உட்கொள்ளுவதால் ஆரோக்கியமான சமூகம் உருவாகும்.

iv)
- விவசாய நிலம் குறைவடைந்து செல்லல்.
- உணவுப் பொருள் இறக்குமதி.
- சீரற்ற காலநிலை
- மரபு ரீதியான தொழில் நுட்பம்.
- உற்பத்திச் செலவு அதிகம்.
- சந்தைப்படுத்தல் பிரச்சினை

*07)*

i) உற்பத்திக் கைத்தொழில்
மூலப் பொருட்களையும், ஏனைய உற்பத்திக் காரணிகளையும் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் செயன்முறையாகும்.

சுரங்கக் கைத்தொழில் / அகழ்வு கைத்தொழில்
புவியில் படிந்து காணப்படுகின்ற கனியங்களை அகழ்ந்தெடுக்கும் செயன்முறையாகும்.

agaram.lk

ii) • ஏற்றுமதி நாடுகளாக அவுஸ்ரேலியா, பிறேசில், தென்னாபிரிக்கா, கனடா, இந்திய காணப்படுகின்றது.
- ஏற்றுமதியில் அவுஸ்ரேலியா, பிறேசில் பிரதான இடத்தினை வகிக்கின்றன.
- இறக்குமதி நாடுகள் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தென்கொரியா, தாய்வான்.
- இரும்புத் தாதின் கேள்வி துரிதமாக அதிகரித்து வருகின்றது.

iii) • சுரங்கங்களின் ஆழம் அதிகரித்தல்.
- சுரங்க விபத்துக்கள் அதிகரித்தல்.
- இயந்திரப் பயன்பாடு அதிகம் மனித உழைப்பு குறைவடைதல்.
- சூழல் சார் பிரச்சினைகள்
- உற்பத்திச் செலவு அதிகம்.

iv) • கனியங்கள் பிரதேச ரீதியாகப் பரந்துள்ளன.
- பிரதேச அபிவிருத்தி கனிய அகழ்வினால் ஏற்படும்.
- கனிய வளங்கள் பிரதேச மக்களுக்கு சிறந்த சமூக, பொருளாதார வசதிகளை ஏற்படுத்த முடியும்.
- கனிய மணல் கரையோர அபிவிருத்தி.
- இரத்தினக்கல் - வருமானம் அதிகம்
  காரீய ஏற்றுமதி – உதாரணம் கொடுத்து விளக்கவும்.

*08)*

i) • சிறிய தீவு
- பௌதிக அடிப்படையிலான கவர்ச்சி.
- வரையறுக்கப்பட்ட பிரதேசத்தினுள் பல்வகைமை அதிகம்.
- சுற்றுலாத் துறையின் புதிய விருத்தி.
  - இயற்கை சார் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா
  - மலை ஏறுதல்.
  - சாகச விளையாட்டுக்கள்
  - சுதேச வைத்தியம்
  - தேசிய உணவு.
- குறுகிய காலத்தினுள் பார்வையிடக் கூடியதாக இருத்தல்.
- ஒரு நாளில் சென்றடையக் கூடிய பிரதேசங்களை அடைய இலகுவாக இருத்தல்.

ii) • சூழல்சார் சுற்றுலா
- கலாசார சுற்றுலா
- பொழுது போக்கு சுற்றுலா
- அழகியல் சுற்றலா
- துணிகரச் சுற்றுலா

iii) பொருளாதாரம்
- அந்நிய செலவாணி
- தொழில் வாய்ப்பு
- தொழில் வாயப்பு அதிகரித்தல்.
- மறைமுகத் தொழில்களின் வளர்ச்சி.
- பிரதேச அபிவிருத்தி
- நகரமயமாக்கம்
- உட்கட்டுமான வசதி விருத்தி

சமூக கலாசாரத் தாக்கம்
- பல்லின – பல் கலாசாரம்.
- வெளிநாட்டு பொறிகள்
- சமூக கலாசார பெறுமானங்களின் பரிமாற்றம்.
- உலக மரபுரிமைகள் பாதுகாக்கப்படல்.
- ஒழுக்கச் சீர்கேடு.
- சிறுவர் துஷ்பிரயோகம்.
- சமூக நோய்கள் பரவுதல்.
- போதைவஸ்துப் பாவனை அதிகரித்தல்.

iv) • கொள்கைகளை இற்றைப்படுத்தல்,
- சுற்றுலாப் பயணிகளின், பாதுகாப்பு தனித்துவத்தினை உறுதிப்படுத்தல்.
- சுற்றுலாக் கைத்தொழிலில் புதிய துறைகளை உள்ளடக்குதல்.
- பாதகமான காரணிகளை இழிவழவாக்குதல்.
- விளம்பரம்